[1987 ஏப்ரல் 8

## வீட்டு வசதி வாரிய புதிய காலனிகள்

341—(*வினா எண் 5489) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வீட்டு வசதி வாரியத்தால் புதிதாக உருவாக்கப்படும் காலனிகளில் சமீபமாக சிறிய தொழிற் கூடங்கள் அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புத் தர அரசு திட்டம் வகுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வீட்டு வசதி வாரியத்தால் புதிதாக உருவாக்கப்படும் காலனிகளில் சமீபமாக சிறிய தொழிற்கூடங்கள் அமைத்து அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் திட்டம் சென்னையைச் சார்ந்த அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் பகுதிகளில் மட்டும் சிட்கோவால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. உலக வங்கியின் நிதியுதவியுடன் இது செயல்படுகிறது. மொகப்பேர் பகுதியில் இப்பணி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பாக நடைபெற்று வருகிறது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு பரப்பளவில் தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது? இந்தத் திட்டத்தை மேலும் விரிவாக்குகிற திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 329 மனைகள் மேற்சொன்ன இடங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் பரப்பளவு ஒவ்வொன்றும் மாறுபடுகிறது. ஒன்று 558 சதுர அடி, அடுத்தது 168 சதுர அடி என்று இப்படியெல்லாம் வருகிறது. எனவே மொத்தமாக ஒவ்வொன்றையும் கூட்ட வேண்டும். ஆக 329 மனைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எங்கே வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் வீட்டு வசதி வாரியத்தோடு சேர்ந்து இதை அமுல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் ஆலோசிக்கப்படும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால், அந்தக் காலனிகளில் குடியிருக்கின்ற படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா?

1987 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படி ஒரு முடிவை எடுக்க முடியாது என்று கருதுகிறேன். அதற்கான குறிப்பு இங்கே இல்லை. இருந்தாலும், தகுதியானவர்கள் யார் யார் என்பதைப் பார்த்து, யார் யார் மனுச் செய்கிறார்களோ, அவர்களிலிருந்து பொறுக்கி எடுப்பதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே இதைப் பற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

தேயிலை உற்பத்தியில் தேக்கம்.

343—(*வினா எண் 6988) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தடுக்க எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில், தேயிலைத் தூள் உற்பத்தியில் அண்மையில் தேக்க நிலை எதுவும் ஏற்படவில்லை.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கக் கூடிய உபாசி போன்ற நிறுவனங்கள் உற்பத்தி செய்த தேயிலையை விற்க முடியாமல் தேக்கம் அடைந்து, தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலியைத் தந்தும் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கம் செய்வதையும் அரசு அறியுமா? இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி, உற்பத்தியிலே ஏதாவது தேக்கம் இருக்கிறதா என்று கேட்டார்கள். உற்பத்தியிலே தேக்கம் இல்லை. விற்பனையைப் பொறுத்தவரை அது நம்முடைய கையிலே இல்லாததால் அந்தந்த சூழ்நிலைக்கேற்ப அனுசரித்து நாம் செய்யவேண்டியிருக்கிறது. தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்கிறார்கள் என்பதற்கான குறிப்பு